**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 64/2024 - PW-4**

| | |
|---|---|
| Name | திரு. பழனி |
| Husband/Father Name | முனுசாமி |
| Village /Area | கோவிந்தாங்கல் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | விவசாயம் |
| Age | 65 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 17.09.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 14.09.2021 அன்று நான் காலையில் வீட்டிலிருந்த போது சுமார் 7.30 மணிக்கு ரங்கநாதன் என்பவரை அன்பு, உமேஷ் என்பவர்கள் அடித்ததாகவும் காயம்பட்ட ரங்கநாதனை ஆட்டோவில் ஏற்றி சோளிங்கர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு முதல் சிகிச்சைப் பெற்றுக் கொண்டு வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள். பிறகு சேகர் என்பவர் ரங்கநாதன் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார். மேலும் ஏற்கனவே உமேஷ் குடும்பத்தாருக்கும் ரங்கநாதன் குடும்பத்தாருக்கும் நிலம் சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது 6 மாத காலமாக அவர்களுக்கிடையே பிரச்சனை இருந்ததாக கேள்விப்பட்டேன். இரு குடும்பத்தாரும் என்னுடைய உறவினர்கள் என்பதால் நான் அவர்களிடம் சுமூகமாக பேசி தீர்த்து கொள்ள

வேண்டியது தானே என்று கேட்டுக் கொண்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

என் வீட்டுக்கும் சம்பவம் இடத்துக்கும் இடைப்பட்ட தொலைவு 600 மீட்டர் என்று சொன்னால் சரிதான். நான் வீட்டின் வெளியே வந்து பார்த்த போது பேருந்து நிறுத்தத்தில் கூட்டமாக இருந்தது. நான் அங்கு சென்ற போது ரங்கநாதனை ஆட்டோவில் ஏற்றியதை பார்த்தேன். உமேஷ் மற்றும் அன்பு ஆகியோர் ரங்கநாதனை அடித்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை கேள்விப்பட்டதன் பேரில் கூறினேன். ரங்கநாதனுக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் சரிதான். அவர் தினமும் குடிப்பார். நான் கூறியது போல் ரங்கநாதனுக்கும் உமேஷ் குடும்பத்தாருக்கும் எந்த விதமான நிலம் சம்பந்தமான பிரச்சனை இல்லை என்றும் அவ்வாறு நான் எந்த விவரத்தையும் கேள்விப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.17 17:28:42 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.